# நமது தின கனி


காலை நாளிதழ்

# NAMADHU DHINA KANI

Daily Morning

| Vol : 01 | Issue : 38 | 4 Pages | 08.09.2023 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 38 | 4 பக்கங்கள் | 08.09.2023 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


# திருவொற்றியூரில் ரூ.58½ கோடி மதிப்பீட்டில் உயர்மட்ட மேம்பாலம்: முதல்வர் திறந்து வைத்தார்




திருவொற்றியூர், செப். 8

திருவொற்றியூரில் ரூ 58.64 கோடி செலவில் உயர்மட்ட மேம்பாலத்தை தமிழக முதல்வர் காணொலி மூலம் திறந்து வைத்தார். பொதுமக்கள், பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கி முதல்வருக்கு நன்றி தெரிவித்தனர். திருவொற்றியூர் மணலி இடையே உள்ள பக்கிங்காம் கால்வாய் மீது போக்குவரத்து நெரிசலை குறைக்க கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்பு ரூ 58.64 கோடி செலவில் 530 மீட்டர் நீளம் கொண்ட உயர்மட்ட மேம்பாலம் கட்டும் பணி துவங்கப்பட்டது. ஆனால் 18 மாதங்களில் முடிக்க வேண்டிய இந்த மேம்பால பணி பல்வேறு காரணங்களால் முடிக்கப்படாமல் தாமதமாகியது. இதனால் வாகன ஓட்டிகள் சுமார் 8 கிலோமீட்டர் தூரம் சுற்றிச்சென்று மிகவும் சிரமப்பட்டனர். இதை அடுத்து இப்பணியை முடிக்க வலியுறுத்தி மணலி சேக்காடு வியாபாரிகள் சங்கம், கம்யூனிஸ்ட் மற்றும் பொதுநல அமைப்பைச் சேர்ந்தவர்கள் போராட்டம் நடத்தினர். இந்த நிலையில் தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்றதும் இந்த பணியை துரிதப்படுத்த வேண்டும் என்று கலாநிதி வீராசாமி எம்.பி,கே.பி.சங்கர் எம்.எல்.ஏ, மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு, ஏ.வி.ஆறுமுகம் நெடுஞ்சாலை துறை அதிகாரியிடம் கோரிக்கை விடுத்தனர். இதனை தொடர்ந்து இந்த உயர்மட்ட மேம்பால பணி துரிதப்படுத்தப்பட்டு சில தினங்களுக்கு முன்பு முடிவடைந்தது. இதையடுத்து இந்த உயர்மட்ட கால்வாய் மேம்பாலத்தை மக்கள் பயன்பாட்டுக்கு இன்று காலை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

இதனை தொடர்ந்து கலாநிதி வீராசாமி எம்.பி,எம்.எல்.ஏ.க்கள் மாதவரம் சுதர்சனம், கே.பி.சங்கர், மண்டல குழு தலைவர்கள் தி.மு. தனியரசு ஏ.வி.ஆறுமுகம் ஆகியோர் கொடியசைத்து இனிப்பு வழங்கினர்.

நிகழ்ச்சியில் கவுன்சிலர்கள் ஜெயராமன், சொக்கலிங்கம், தி.மு.க. தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். மணலி சேக்காடு பொது வியாபாரிகள் சங்கம் சார்பில் தலைவர் டி.ஏ.சண்முகம், பொதுச்செயலாளர் பூபால கிருஷ்ணன், பொருளாளர் நாராயணலால் துணை செயலாளர் செல்வராஜ் ஆகியோர் தலைமையில் புதிய பாலத்தில் விபத்துக்கள் ஏற்படக்கூடாது என்று சிறப்பு பூஜை செய்து தேங்காய் பழம் உடைத்து இனிப்புகள் வழங்கினர். நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் மலர்விழி, கண்காணிப்பு பொறியாளர் கந்தசாமி, உதவி பொறியாளர் விக்னேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஈரோடு தெற்கு மாவட்ட திமுக மாவட்ட, மாநகர மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணியின் ஆலோசனை கூட்டம்



ஈரோடு, செப். 8

ஈரோடு தெற்கு மாவட்ட திமுக மாவட்ட, மாநகர மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணியின் ஆலோசனை கூட்டம் ஈரோடு பெரியார் நகரில் உள்ள அமைச்சர் சு.முத்துசாமியின் முகாம் அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி, வீட்டுவசதி துறை மற்றும் மது விலக்கு ஆயத்தீர்வு துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமை தாங்கினார்,

திமுக மாநில மகளிர் தொண்டர் அணி துணை செயலாளர் சத்யா பழனிகுமார் முன்னிலை வகித்தார்,

இந்த நிகழ்ச்சியில் ஈரோடு தெற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திலகவதி கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கினார்.

இதனை தொடர்ந்து முத்தமிழ் அறிஞர் கலைஞர் கருணாநிதியின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவது எனவும், முதியோர், ஆதரவற்ற குழந்தைகள் இல்லத்திற்கு சென்று உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குவது எனவும், மாவட்ட, மாநகர பகுதிகளில் இருந்து மகளிர் அணிக்கு புதிய உறுப்பினர்கள் சேர்ப்பது எனவும், மகளிர் மற்றும் மகளிர் தொண்டர் அணியினர்களுக்கு உறுப்பினர் அட்டை வழங்குவது எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட, மாநகர, மகளிர் அணி நிர்வாகிகள் மற்றும் மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# மயங்கி விழுந்து 4 வயது பெண் குழந்தை சாவு

ஊத்துக்குளி, செப். 8

ஈரோடு மாவட்டம் குமலன்குட்டை, செல்வம் நகரை சேர்ந்தவர் நவீன்குமார் (30). இவரது மனைவி பிரணவி. இவர்களுக்கு ஈசன்வி என்ற 4 வயது பெண் குழந்தை உள்ளது. இவர்கள் குன்னத்தூரில் இருந்து செங்கப்பள்ளி செல்லும் சாலையில் உள்ள ஆதியூரில் வசித்து வருகிறார்கள். சம்பவத்தன்று பிரணவி தனது குழந்தை ஈசன்வியுடன் வீட்டின் வராண்டாவில் உள்ள கட்டிலில் உட்கார்ந்து இருந்தார்.

அப்போது ஈசன்வி திடீரென மயங்கி விழுந்துள்ளார். இதனை கண்டு அதிர்ச்சி அடைந்த பிரணவி, தனதுகுழந்தையைதூக்கிக்கொண்டு திருப்பூரில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். அங்கு குழந்தையை பரிசோதனை செய்த டாக்டர்கள் குழந்தை ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

பின்னர் அங்கிருந்து திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்குள்ள பிரேத பரிசோதனை மையத்தில் குழந்தை வைக்கப்பட்டுள்ளது.

குழந்தைக்கு ஆஸ்துமா நோய் இருந்ததாக தெரிகிறது. அதனால் மூச்சு விட முடியாமல் மயங்கி விழுந்துள்ளது. இது குறித்து ஊத்துக்குளி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# மூடப்பட்ட மதுக்கடை மீண்டும் திறப்பு பல்லடம் பொதுமக்கள் தர்ணா



பல்லடம், செப். 8

பல்லடம் செட்டிபாளையம் சாலையில் அரசு டாஸ்மாக் மதுபானக்கடை செயல்பட்டு வருகிறது. நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள இந்த டாஸ்மாக் மதுபான கடையில் தினமும் சுமார் 300க்கும் மேற்பட்டவர்கள் மது வாங்க வருவது வழக்கம். இந்த நிலையில் அங்கு மது வாங்க வரும் சிலர் அங்கேயே குடித்து விட்டு அருகிலுள்ள கடைகளுக்கு சென்று படுத்து உறங்குவதும்,ரோட்டிலேயே இயற்கை உபாதைகளை கழிப்பதும் என அந்த இடத்தையே அசிங்கப்படுத்தி வருவதாககூறி,அந்த மதுபானகடையை அங்கிருந்து அகற்றக்கோரி பொதுமக்கள் கண்டன ஆர்ப்பாட்டம், சாலை மறியல் என தொடர்ந்து போராடி வருகின்றனர். இந்த நிலையில் மதுபானகடையை அகற்றக்கோரி நேற்று பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.இது குறித்து சமூக ஆர்வலர் கூட்டமைப்பின் தலைவர் அண்ணாதுரை கூறியதாவது : இந்த மதுபான கடையால் பல்வேறு இன்னல்கள் ஏற்படுகிறது. மதுபானம் வாங்கி குடித்துவிட்டு போதைதலைக்கேறி அருகில் உள்ள கடைகளின் முன்பு குடிமகன்கள் படுத்து விடுகின்றனர். மேலும் பலர் பெண்கள் வருவது கூட தெரியாமல் அங்கேயே இயற்கை உபாதைகளை கழிக்கின்றனர். குடிமகன்கள் எந்தநேரமும் போதையில் நிற்பதால் அவ்வழியே பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர் மற்றும் பெண்கள் ஆகியோர் நடந்து செல்வதற்கு அச்சப்படுகின்றனர். மேலும் பல்லடம் செட்டிபாளையம் சாலை போக்குவரத்து நிறைந்த சாலை ஆகும். மதுபானம் வாங்க வரும் குடிமகன்கள்கடை முன்பு நடுரோட்டில் வாகனங்களை நிறுத்தி செல்வதால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இந்த மதுபானகடையை அகற்றகோரி 15 ஆண்டுகளாக பலமுறை புகார் அளித்தும் இதுவரைநடவடிக்கைஇல்லை.எனவே மதுபானகடையை அகற்றும் வரை தொடர்ந்து போராட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதனால் மீண்டும் மதுபானகடையை அகற்றக்கோரி கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துகிறோம் என்றார். மதுபானகடையை அகற்றக்கோரி பொதுமக்கள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த பல்லடம் தாசில்தார் ஜெய்சிங் சிவக்குமார் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். பேச்சுவார்த்தை முடிவில் இந்த மதுபானகடை இங்கு செயல்படாது எனவும் தற்காலிகமாக மூடப்படும் என தெரிவித்தார்.தாசில்தாரின் இந்த அறிவிப்பை உற்சாகமாக கைதட்டி வரவேற்ற பொதுமக்கள் அங்கிருந்தவர்களுக்கு இனிப்பு வழங்கி மகிழ்ந்தனர். மேலும் அந்தப் பகுதியில் பட்டாசுகள் வெடிக்கப்பட்டது. இந்த நிலையில் தாசில்தாரின் உத்தரவை மீறி மதியம் சுமார் 3 மணி அளவில் மதுபான கடை மீண்டும் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதையடுத்து மீண்டும் அங்கு வந்த பொதுமக்கள் மதுக்கடை முன்பு அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் சாலை மறியலுக்கும் முயன்றனர். இதையடுத்து அங்கு வந்த போலீசார் அவர்களை சமாதானம் செய்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

# ஜி20 தலைவர்களை வரவேற்க தயார் நிலையில் இந்தியா




டெல்லி, செப். 8

உலகின் வல்லரசு நாடுகளான அமெரிக்கா, சீனா, ரஷியா உட்பட இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகளின் கூட்டமைப்பு ஜி20. இக்கூட்டமைப்பின் 18வது உச்சி மாநாடு இந்திய தலைநகர் புதுடெல்லியில் வரும் 9, 10ம் தேதிகளில் நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்க அனைத்து நாடுகளின்தலைவர்களும்வருவார்கள்எனஎதிர்பார்க்கப்பட்டநிலையில், ஒரு சில அதிபர்கள் பங்கேற்க மாட்டார்கள் எனும் தகவல் வெளியாகியுள்ளது. தற்போதைய நிலவரப்படி, ரஷிய அதிபர் விளாடிமிர் புதின், சீன அதிபர் ஜி ஜின்பிங்க், மெக்சிகோ அதிபர் ஆண்ட்ரெஸ் மானுவல் லோபெஸ் ஒப்ரடார் ஆகியோர் பல்வேறு காரணங்களால் வர மாட்டார்கள் என அந்நாடுகள் தெரிவித்துள்ளன. அமெரிக்க அதிபர் ஜோ பைடன், பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, ஜப்பான் பிரதமர் ஃப்யுமியொ கிஷிடா, ஜெர்மனி அதிபர் ஓலஃப் ஷோல்ட்ஸ், பிரான்ஸ் அதிபர் எம்மானுவேல் மேக்ரான், சவுதி அரேபியா இளவரசர் மொஹம்மத் பின் சல்மான், தென் ஆப்பிரிக்கா அதிபர் சிரில் ரமபோஸா, தென் கொரியா அதிபர் யூன் சுக்இயோல், ஆஸ்திரேலியா பிரதமர் ஆன்டனி அல்பானீஸ் மற்றும் துருக்கி அதிபர் ரெசிப் டாயிப் எர்டோகன் ஆகியோர் பங்கேற்கிறார்கள் என தெரிய வந்துள்ளது. இத்தாலி, இந்தோனேசியா, பிரேசில் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய உறுப்பினர்கள் பங்கேற்கிறார்களா இல்லையா என்பது குறித்து இதுவரை உறுதியான தகவல்கள் வெளியாகவில்லை. இந்நிலையில், நைஜீரிய அதிபர் போலா டினுபு மற்றும் மவுரிஷியஸ் பிரதமர் பிரவிந்த் குமார் ஜக்நாத் ஆகியோர் வந்திறங்கியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

# நாட்டில் 90 கோடி இந்துக்கள் வாழ்கிறார்கள்: உதயநிதி கருத்துக்கு சிவசேனா பதில்



மும்பை, செப். 8

சனாதன தர்மம் குறித்த தமிழக அமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் கருத்து சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. இந்தியா கூட்டணியில் இடம் பெற்றுள்ள சிவசேனா (உத்தவ் தாக்கரே பிரிவு) எம்.பி. சஞ்சய் ராவத் இதுகுறித்து கூறியதாவது: உதயநிதி ஸ்டாலின் ஒரு அமைச்சர். அவரது அந்த பேச்சை நான் கேள்விப்பட்டேன். யாரும் இதை ஆதரிக்க மாட்டார்கள். இதுபோன்ற அறிக்கைகளை வெளியிடுவதை தவிர்க்க வேண்டும். இது தி.மு.க.வின் பார்வையாகவோ அல்லது அவரது தனிப்பட்ட பார்வையாகவோ இருக்கலாம். சுமார் 90 கோடி இந்துக்கள் இந்த நாட்டில் வாழ்கிறார்கள். மற்ற மதத்தினரும் இந்த நாட்டில் வாழ்கிறார்கள். அவர்களின் மத உணர்வுகளை புண்படுத்த கூடாது. நாட்டின் நிலைமை மோசமடையக் கூடாது. எங்கள் மீது பா.ஜனதா தாக்குதல் நடத்த இதுபோன்ற கருத்துக்கள் அமையக் கூடாது. மு.க.ஸ்டாலின் மரியாதைக்குரிய தலைவர். அவரை நாடே உற்று நோக்குகிறது. அவர் எங்களுடன் இணைந்து இருக்கிறார். எனவே இதுபோன்று கருத்துக்களை வெளியிடுவதற்கு முன் அவருக்கு நெருக்கமானவர்கள் தங்கள் வார்த்தைகளை கவனத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறு சஞ்சய் ராவத் கூறியுள்ளார்.

# ஜி20 மாநாடு: எங்களைத் தாண்டி எதுவும் நுழைய முடியாது.. உச்சக்கட்ட பாதுகாப்பில் புது டெல்லி



டெல்லி, செப். 8

சர்வதேச நாடுகளுக்கிடையே பொருளாதார ஒத்துழைப்பை அதிகரிக்கவும், பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் சிக்கல்களுக்கு தீர்வு காணவும், இந்தியா உட்பட உலகின் 19 நாடுகளும், ஐரோப்பிய ஒன்றியமும் இணைந்து உருவாக்கிய கூட்டமைப்பு ஜி20. இக்கூட்டமைப்பின் 18வது உச்சி மாநாடு, இந்திய தலைநகர் புது டெல்லியில் பிரகதி மைதானத்தில் உள்ள பாரத் மண்டப மாநாட்டு மையத்தில் செப்டம்பர் 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்க பெரும்பாலான உறுப்பினர் நாடுகளின் தலைவர்களும், அதிபர்களும் புது டெல்லிக்கு வந்த வண்ணம் உள்ளனர். தலைவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பாதுகாப்பிலும், விருந்தோம்பலிலும் எந்தவித குறைபாடுகள் இன்றி இரு நாட்களிலும் மாநாடு நடைபெற அரசு தரப்பில் மும்முரமாக வேலைகள் நடைபெற்று வருகிறது. பிரகதி மைதானத்தை சுற்றிலும் உள்ள பகுதிகளில் காவல் மிகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. சுமார் 1 லட்சத்து 30 ஆயிரம் காவல்துறை பணியாளர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர். வான்வெளி பாதுகாப்பை பலப்படுத்தும் நோக்கில், இந்திய விமானப்படை பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளது.

ஆளில்லா விமானங்கள் முதல் பட்டங்கள் கூட பறக்க தடை செய்யப்பட்டுள்ளது. புது டெல்லி காவல்துறையின் ரெயில்வே காவல் பிரிவு, மத்திய ரெயில்வே காவல்துறையுடன் இணைந்து டெல்லி ரெயில்வே நிலையம் அருகே ரோந்து பணிகளை மேற்கொண்டது. பயணிகளின் உடைமைகள் பரிசோதிக்கப்பட்டது. புது டெல்லியின் மதுரா சாலை, பைரோன் சாலை, புரானா கிலா சாலை, பிரகதி மைதான் சுரங்க சாலை ஆகிய இடங்களில் செப்டம்பர் 7 நள்ளிரவில் இருந்து செப்டம்பர் 10 வரை அனைவருக்குமான போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது. பால், பழங்கள், மருந்து மற்றும் காய்கறி ஆகியவற்றை கொண்டு செல்லும் வாகனங்கள் மட்டுமே அனுமதிக்கப்படும். செப்டம்பர் 8 காலை முதல் செப்டம்பர் 10 வரை புது டெல்லி முழுவதும் கட்டுப்பாட்டு பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட வாகனங்கள், அவசரகால வாகனங்கள், மற்றும் விமான நிலையம், பழைய டெல்லி ரெயில்வே நிலையம் மற்றும் புது டெல்லி ரெயில்வே நிலையம் செல்லும் வாகனங்கள் ஆகியவை மட்டுமே அடையாளங்கள் உறுதியான பயணிகளுடன் செல்ல அனுமதிக்கப்படும். இன்று (செப்டம்பர் 7) கோகுலாஷ்டமி விடுமுறையுடன், செப்டம்பர் 8ம் தேதியில் இருந்து செப்டம்பர் 10ம் தேதி வரை என தொடர்ந்து நான்கு நாட்களுக்கு புது டெல்லியில் அரசு விடுமுறை அறிவிக்கப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது. புது டெல்லியில் ஜி20 உச்சி மாநாடு நடத்தப்படுவதை பெருமையாக கொள்வதால், இத்தனை கட்டுப்பாடுகளையும் டெல்லி மாநகர மக்கள் வரவேற்கிறார்கள்.

# விலைவாசி உயர்வை கண்டித்து சென்னையில் 9 இடங்களில் மறியல் 1000 பேர் கைது

சென்னை, செப். 8

பாரதிய ஜனதா ஆட்சியில் விலைவாசி உயர்வை கண்டித்தும், அனைவருக்கும் வேலை வழங்க வலியுறுத்தியும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு சார்பில் இன்று தமிழகம் முழுவதும் மறியல் போராட்டங்கள் நடைபெற்றன. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் தலைமையில் கிண்டி ரயில்நிலையத்தில்ரெயில் மறியல் போராட்டம் நடந்தது. கிண்டி ரெயில் நிலையத்தில் 300க்கும் மேற்பட்டோர் ரெயில் மறியல் போராட்டத்தில் பங்கேற்றனர். அங்கு வந்த மின்சார ரெயிலை மறித்து போராட்டம் நடத்தினார்கள். போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மத்திய அரசைகண்டித்து கோஷங்களை எழுப்பினார்கள். ரெயில் மறியலையொட்டி கிண்டி ரெயில் நிலையம் முன்பு பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது. மறியலில் ஈடுபட்டவர்களை போலீசார் கைது செய்தனர். அப்போது போலீசாருக்கும் கம்யூனிஸ்டு கட்சியினருக்கும் இடையே தள்ளு முள்ளு ஏற்பட்டது. ரெயில் மறியல். போராட்டத்தில் ஈடுபட்ட மாநில செயலாளர் கே. பாலகிருஷ்ணன் உள்பட 300 பேரை போலீசார் கைது செய்தனர். கைதானவர்கள் நந்தனம் ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். முன்னதாக மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் நிருபர்களிடம் கூறியதாவது: விலைவாசி பிரச்சினை இந்தியா முழுவதும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. பல கோடி மக்கள் வேலை வாய்ப்பை இழந்து வேலையில்லாமல் இருக்கிறார்கள். மோடி ஆட்சியில் செயல்படும் திட்டம் எல்லாமே உருப்படாத திட்டம்தான். தமிழகம் முழுவதும் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் விலைவாசியை கட்டுப்படுத்த கோரி போராட்டம் நடத்தி வருகிறோம். வரும் பாராளுமன்ற தேர்தலையொட்டி எதிர் கட்சிகளை திசை திருப்பதான் இந்தியா என்ற பெயரை 'பாரத்' என்று மாற்றுகிறார்கள். அதனைத் தொடர்ந்து ஒரேநாடு ஒரே தேர்தல் நடத்த வேண்டும் என்றும் கூறுகிறார்கள். அனைத்து இளைஞர்களுக்கும் சரியான வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.



சென்னைஅண்ணாசாலையில் தபால் நிலையம் முன்புமத்தியகுழுஉறுப்பினர் சம்பத் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு நிர்வாகிகள் நூற்றுக்கணக்கானோர் மறியலில் ஈடுபட்டனர். அவர்களும் கைது செய்யப் பட்டனர். திருவொற்றியூர் தபால் நிலையம் முன்பு மத்திய குழு உறுப்பினர் வாசுகி தலைமையில் மறியல் போராட்டம் நடைபெற்றது. கவுன்சிலர் லோகநாதன் மற்றும் ஜெயராமன், பாக்கியம், கதிர்வேலு உள்பட 200 பேர் கைது செய்யப்பட்டனர். இதே போன்று தமிழகம் முழுவதும் மத்திய அரசு அலுவலகங்கள் முன்பு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினர் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட கைதாகியுள்ளனர். சென்னையில் மட்டும் 9 இடங்களில் நடந்த மறியல் போராட்டத்தில் 1000க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# சாலை விபத்தில் 2 பேர் காயம்

கரூர், செப். 8

குளித்தலை அருகே உள்ள ஈச்சம்பட்டி பகுதியை சேர்ந்தவர் சிவக்குமார்(வயது 44). சத்தியமங்கலம் பகுதியை சேர்ந்த மாட்டு தரகர் ஓமாந்து (81). இந்தநிலையில் சிவக்குமார் தனக்கு மாடு வாங்குவதற்காக ஓமாந்துவை தனது இரு சக்கர வாகனத்தில் ஏற்றிக் கொண்டு சென்று கொண்டிருந்தார். சத்தியமங்கலம் பஸ் நிறுத்தம் அருகே 2 பேரும் சாலையை கடந்துள்ளனர். அப்போது அதே சாலையில் வந்த மற்றொரு இரு சக்கர வாகனம், இவர்கள் மீது மோதியது. இதில் சிவக்குமார் மற்றும் ஓமாந்து ஆகியோர் படுகாயம் அடைந்தனர். இதையடுத்து 2 பேரும் குளித்தலை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இந்த விபத்து குறித்து குளித்தலை போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.9.31 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

அவிநாசி, செப். 8

அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.9.31 லட்சத்துக்கு பருத்தி ஏலம் நடைபெற்றது. இந்த வாரம் புதன்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு விவசாயிகள் 463 மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், ஆர்.சி.எச். ரக பருத்தி குவிண்டால் ரூ.6,000 முதல் ரூ.7,355 வரையிலும், மட்டரக (கொட்டு ரகம்) பருத்தி குவிண்டால் ரூ.2,000 முதல் ரூ.3,500 வரையிலும் ஏலம் போனது. ஒட்டுமொத்த விற்பனைத்தொகை ரூ.9 லட்சத்து 31 ஆயிரம் என விற்பனைக்கூட அதிகாரிகள் தெரிவித்தனர்.

# ஒரே நாடு ஒரே தேர்தல் சாத்தியமில்லை திருப்பூரில் தமிமுன் அன்சாரி பேட்டி



திருப்பூர், செப். 8

ஒரே நாடு ஒரே தேர்தல் சாத்தியமில்லை என்று மனிதநேய ஜனநாயக மக்கள் கட்சித் தலைவர் தமிமுன் அன்சாரி தெரிவித்தார்.இது தொடர்பாக அவர் திருப்பூரில் நிருபர்களிடம் கூறும் போது, திருப்பூரில்அடிக்கடி நூல்விலை ஏற்றத்தால் பின்னலாடை தொழில் மிகவும் நலிவடைந்து காணப்படுகிறது. தமிழகத்தில் போதைப் பொருட்களை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும். படிப்படியாக மதுக்கடைகளை மூட வேண்டும். இதற்கு அனைத்து கட்சிகள் கூட்டம் நடத்தி ஆலோசனை செய்ய வேண்டும்.அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசிய சனாதனத்துக்கு நான் பதில் கூற முடியாது. ஒரேநாடு ஒரே தேர்தல் என்பது சாத்தியமற்றது. இந்தியா என்ற பெயரைமாற்ற வேண்டும் எனக் கூறியிருப்பது மக்களைத் திசை திருப்பக் கூடிய ஒரு செயலாகும். நாம் இந்தியர்கள் என்று உலக நாடுகளுக்கு பெருமையாக சொல்லிக் கொண்டிருக்கிறோம், அதை மாற்ற வேண்டும் என்பது தவறான செயல் என்றார்.

# உடுமலையில் வனவிலங்குகள் விளைநிலங்களுக்குள் புகுவதை தடுக்க கோரிய விவசாயிகள்

உடுமலை, செப். 8

உடுமலை மாவட்ட வன அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு உதவி வனப் பாதுகாவலர் மற்றும் உதவி இயக்குனர் க.கணேஷ்ராம் தலைமை வகித்தார். அதைத்தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் மலை அடிவாரப் பகுதியில் உள்ள விவசாயிகள் கூறியதாவது; வளையபாளையம் பகுதியில் குரங்குகள் நடமாட்டம் அதிக அளவில் உள்ளது. அவை தென்னை மரங்களில் இளநீர் பதத்தில் உள்ள காய்களை பறித்து சேதப்படுத்தி வருகிறது. அந்த வகையில் இதுவரையில் ஏராளமான தேங்காய்கள் வீணாகி உள்ளது. அதற்கு கூண்டு வைத்து பிடிக்கப்படும் என்று அதிகாரி தெரித்தார். மேலும் காண்டூர்கால்வாய்அருகே வீட்டு மனை இடங்கள் கொடுப்பதற்காக மணல் பாங்கான மலைக் குன்று ஒன்றில் தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டது. விவசாயிகளின் மற்றும் பொதுமக்களின் எதிர்ப்பு காரணமாக அந்த பணி கைவிடப்பட்டது. அடிவார பகுதியில் வனவிலங்குகள் தங்கும் பகுதி தூய்மைப் படுத்தப்பட்டதால் மான் காட்டுப்பன்றி உள்ளிட்டவை விளைநிலங்களுக்கு புகுந்து வருகிறது. அதை தடுப்பதற்கும் தூய்மைப்படுத்திய நபர் மீதும் உரிய நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும். மேலும் காண்டூர் கால்வாயின் குறுக்காக கட்டப்பட்டுள்ள உபயோகம் இல்லாத பாலத்தின் வழியாக மான்,காட்டுப்பன்றி உள்ளிட்ட வனவிலங்குகள் அதிக அளவில் வருகிறது. இதனால் அந்தப் பாலத்தை அடைத்துக் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்தனர்.இது குறித்து அதிகாரிகளிடம் ஆலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உதவி வனப்பாதுகாவலர் தெரிவித்தார்.



நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066



சின்னமனூரில் தேனி மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாபெரும் கலை நிகழ்ச்சிகள் தேனி மாவட்டம் சின்னமனூர் மறவர் மன்றத்தில் கலைஞரின் நூற்றாண்டு விழா கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இவ்விழாவினை தேனி மாவட்ட ஆட்சியர் ஆர்.வி. ஷஜீவனா தலைமையேற்றார் கம்பம் சட்டமன்ற உறுப்பினர் என். இராமகிருஷ்ணன் விழாவினை துவங்கி வைத்து உரையாற்றினார். இவ் நிகழ்ச்சியை தமிழ்நாடு அரசு கலை பண்பாட்டுத் துறை மண்டலக் கலை பண்பாட்டு மையம் நடத்தியது. இதில் பள்ளி மாணவர்கள் சிலம்பம் தப்பாட்டம் மயில்லாட்டம் பரதநாட்டியம் மற்றும் பல கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது இதில் ஏராளமான பள்ளி மாணவ, மாணவிகள் இருபால் ஆசிரியர்கள் பொதுமக்கள் என பலர்கலந்து கொண்டனர்.

# உதயநிதி பேசிய முழு விவரம் அறியாமல் பிரதமர் பேசுவதா? முதலமைச்சர் ஸ்டாலின் அறிக்கை



சென்னை, செப். 8

தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: சென்னையில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற சனாதன எதிர்ப்பு மாநாட்டில் உரையாற்றிய அமைச்சர் உதயநிதி, சனாதனம் குறித்த சில கருத்துகளைத் தெரிவித்தார். பிற்படுத்தப்பட்டோர்– பட்டியலினத்தவர்– பழங்குடியினர்– பெண்ணினத்திற்கு எதிரான 'சனாதனக் கோட்பாடுகளை ஒழிக்க வேண்டும்' என்றுதான் அமைச்சர் பேசினாரே தவிர எந்த மதத்தையும்– மத நம்பிக்கைகளையும் புண்படுத்தும் வகையில் பேசவில்லை. பிறப்பின் அடிப்படையிலான ஏற்றத்தாழ்வையும் பெண்ணடிமைத் தனத்தையும் நியாயப்படுத்தும் பழமைவாத வர்ணாஸ்ரம மனுவாத சனாதன சிந்தனைகளுக்கு எதிராக, இந்திய துணைக் கண்டத்தில் தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், ஜோதிபா பூலே, நாராயணகுரு, வள்ளலார், வைகுண்டர் என பல பெரியோர்கள் குரல் கொடுத்து வந்துள்ளனர். அந்த மரபின் நீட்சியாக, சாதியின் பெயராலும் சாஸ்திரங்களின் பெயராலும் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமையை, பெண்களின் சமத்துவ வேட்கையை மறுத்து சுரண்டலை நியாயப்படுத்துவதற்கு எதிரான கருத்தியல் ரீதியான வாதங்கள் இந்திய தேசத்தின் பல முனைகளில் இருந்தும் தொடர்ந்து ஒலிப்பதை சமூகவியல் ஆய்வாளர்கள் அறிவார்கள். நிலவுக்குச் சந்திராயன் விடும் இந்தக் காலத்திலும் சாதி வேற்றுமைகள் கற்பித்தும், வர்ணாசிரமக் கருத்துகளைச் சொல்லி பாகுபாடுகளை வலியுறுத்தியும், இந்தப் பிளவுபடுத்தும் எண்ணங்களுக்கு ஆதரவாக சாஸ்திரங்களையும், சில பழைய நூல்களையும் மேற்கோள் காட்டியும் சிலர் பிரச்சாரம் செய்து வரத்தான் செய்கிறார்கள். குழந்தைத் திருமணத்தை ஆதரித்து மாநிலத்தின் ஆளுநரே பேசுகிறார். குழந்தைத் திருமணம் செய்தவர்கள் மீது சட்டரீதியாக நடவடிக்கை எடுத்தால், அதற்கும் தடை போடுகிறார். 'நானே குழந்தைத் திருமணம் செய்து கொண்டவன்தான்' என்றும், அந்த எண்ணங்களை நியாயப்படுத்திப் பேசி வருகிறார். பெண்களை இழிவுபடுத்தியும், அவர்கள் வேலைக்குப் போகக் கூடாது என்றும், கணவனை இழந்த பெண்கள் மறுமணம் செய்து கொள்ளக் கூடாது என்றும், மறுமணத்துக்கு மந்திரமே கிடையாது என்றும் இன்னமும் சிலர் ஆன்மீக மேடைகளில் பேசி வருகிறார்கள். சமூகத்தின் சரிபாதிக்கும் அதிகமான பெண் இனத்தை 'சனாதனம்' என்ற சொல்லை வைத்துத்தான் அடிமைப்படுத்த நினைக்கிறார்கள். இத்தகைய அடக்குமுறை சிந்தனைகளுக்கு எதிராகத்தான் அமைச்சர் உதயநிதி பேசினார். இத்தகைய கொள்கைகளை முற்றிலுமாக ஒழித்தாக வேண்டும் என்று சொன்னார். இதனைத் தாங்கிக் கொள்ள முடியாத பா.ஜ.க. ஆதரவு சக்திகள், 'சனாதன எண்ணம் கொண்டவர்களை இனப்படுகொலை செய்யச் சொன்னார் உதயநிதி' என்று பொய்யைப் பரப்பினார்கள். இத்தகைய பொய்யைப் பரப்புவதற்காக பா.ஜ.க.வினரால் திட்டமிட்டு வளர்க்கப்படும் சமூக வலைத்தள கும்பலானது, இதனை வட மாநிலம் முழுவதும் பரப்பியது. 'இனப்படுகொலை' என்ற சொல்லை தமிழிலோ, ஆங்கிலத்திலோ அமைச்சர் உதயநிதி எந்த இடத்திலும் சொல்லவில்லை. ஆனால் அப்படிச் சொன்னதாக பரப்பினார்கள். பொய்யர்கள்தான்இதனை பரப்புகிறார்கள் என்றால், பொறுப்பு வாய்ந்த பதவியில் இருக்கும் ஒன்றிய அமைச்சர்கள், பா.ஜ.க. முதலமைச்சர்கள் உண்மையில் அமைச்சர் உதயநிதி என்ன பேசினார் என்பதைத் தெரிந்து கருத்து சொல்லி இருக்க வேண்டும். மாறாக, உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உள்ளிட்டவர்கள் அதே பொய்ச் செய்தியையே பரப்பி உதயநிதியைக்கண்டித்துள்ளார்கள். 'நான் அப்படி பேசவில்லை' என்று அமைச்சர் உதயநிதி தெரிவித்து விட்ட பிறகாவது தங்களது பேச்சுகளை ஒன்றிய அமைச்சர்கள் மாற்றி இருக்க வேண்டும். ஆனால், அப்படி செய்யவில்லை. உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த ஆன்மீகவாதி ஒருவர், அமைச்சர் உதயநிதியின் படத்தை எரித்து, 'தலைக்கு 10 கோடி' என்று விலை வைத்திருப்பதும் அதனை பா.ஜ.க. ஆதரவு சக்திகள் பரப்புவதும்தான் இவர்களது பாணியா? அமைச்சரின் தலைக்கு விலை வைத்து ஒருவர் அறிவிக்கிறார் என்றால், அவர் மீது உத்தர பிரதேச மாநில அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததா? வழக்கு போட்டதா? மாறாக, உதயநிதி மேல் வழக்கு போட்டுள்ளார்கள். இந்த நிலையில், 'சனாதனத்தைப் பற்றி தவறாகப் பேசினால் உரிய பதிலடி கொடுக்க வேண்டும்' என்று ஒன்றிய அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் பேசியதாக தேசிய செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஒரு செய்தி வந்தால், அது உண்மையா பொய்யா என்பதை அறிந்துகொள்ளும் அனைத்து வசதிகளும் நாட்டின் பிரதமருக்கு உண்டு. அப்படி இருக்கையில், அமைச்சர் உதயநிதி சொல்லாத ஒன்றைச் சொன்னதாகப் பரப்பியது குறித்து, பிரதமர் அறியாமல் பேசுகிறாரா? அல்லது அறிந்தேதான் பேசுகிறாரா? ஏற்கனவே கடந்த சில வாரங்களுக்கு முன்பு, அமைச்சர் எ.வ.வேலு பேசிய வீடியோ ஒன்றின் உண்மைத்தன்மையை அறியாமல் நாடாளுமன்றத்திலேயே பேசியிருந்தார் பிரதமர். இதையெல்லாம் பார்த்தால், நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் கொடுத்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றாத பிரதமர், இப்போது, மக்களைத் திசைதிருப்பி சனாதனப் போர்வையைப் போர்த்திக்கொண்டு குளிர்காய நினைப்பதாகவே தெரிகிறது. மணிப்பூர் பற்றியோ சி.ஏ.ஜி அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள 7.50 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான முறைகேடுகள் பற்றியோ பிரதமரும்ஒன்றியஅமைச்சர்களும் இன்னும் வாயே திறக்கவில்லை. ஆனால் சனாதனத்தைப் பற்றி பேசியவுடன், ஒன்றிய அமைச்சரவையே கூடி இருக்கிறது என்றால், இவர்கள்தான் பிற்படுத்தப்பட்ட– பட்டியலின – பழங்குடியின மக்களைக் காப்பாற்றப் போகிறார்களா? பெண்ணினத்தை முன்னேற்றப் போகிறார்களா? அதனால்தான் நேற்று அம்பேத்கரின் பேரன் பிராகாஷ் அம்பேத்கர் கூட, "தீண்டாமையை ஆதரிக்கும் சனாதனத்தை எப்படி நாம் ஏற்றுக்கொள்ள முடியும்" எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதற்கு பிரதமர் பதில் என்ன? பா.ஜ.க.வுக்கு எதிரான கட்சிகள் அனைத்தும் சேர்ந்து உருவாக்கியுள்ள 'இந்தியா' கூட்டணியானது பிரதமரை நிலைதடுமாற வைத்துவிட்டது. 'ஒரே நாடு ஒரே தேர்தல்' என ஏதோ பூச்சாண்டி காட்டி வருகிறார். நாடாளுமன்றத் தேர்தலைப் பார்த்து பயந்திருப்பது பா.ஜ.க. தானே தவிர, 'இந்தியா' கூட்டணி அல்ல. பா.ஜ.க.வுக்கு இப்போது வந்திருப்பது, சனாதனத்தின் மீதான ஈடுபாடு அல்ல. இந்தியா கூட்டணிக்குள் எப்படியாவது விரிசலை ஏற்படுத்திவிட முடியாதா? என்ற அரசியல் கணக்கு. இதைப் புரிந்துகொள்ள பெரிய அரசியல் வித்தகம் எதுவும் தேவையில்லை. மேலும், ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் தலைவர் மோகன் பாகவத் அவர்களே, "சமூக அமைப்பில் சக மனிதர்களைப் பின்னுக்குத் தள்ளி விட்டோம். நாம் அவர்களைப் பற்றிக் கவலைப்படவில்லை. மேலும் அது 2000 ஆண்டுகளாகத் தொடர்ந்தது. நாம் அவர்களுக்கு சமத்துவத்தை வழங்கும் வரை, இடஒதுக்கீடு உள்ளிட்ட சிறப்புத் தீர்வுகள் இருக்க வேண்டும்" என்று பேசியிருக்கிறார். எனவே, இதற்கு மேலும் உதயநிதி பேசியது தொடர்பாக பா.ஜ.க.வினருக்கு விளக்கம் வேண்டும் என்றால், மோகன் பாகவத்தை கேட்டுத் தெரிந்து கொள்ளட்டும். அரசியலுக்காக மத உணர்வைக் கிளறி ஆதாயம் தேடும் அற்ப அரசியலை, பழுத்த அனுபவமும் நாட்டின் மீது மாறாப் பற்றும் கொண்ட தலைவர்கள் புறந்தள்ளி, பா.ஜ.க.விடமிருந்து நாட்டைக் காக்கும் கடமையை மேலும் வேகப்படுத்துவார்கள். திமுகவை பொறுத்தவரையில் அதனுடைய கொள்கை கோட்பாடுகள் என்பவை வெளிப்படையானவை. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்றும், ''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்றும் இயங்கும் இயக்கம். பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட பட்டியலின பழங்குடி மக்களுக்கும்; சிறுபான்மைச் சமூகத்துக்கும்; பெண்ணினத்துக்கும்; ஏழை எளிய மக்களுக்கும் 'எல்லாம்' கிடைக்க வேண்டும் என்பதற்காகத் தோற்றுவிக்கப்பட்டு, அவர்களது உயர்வுக்காக குரல் கொடுத்து வரும் இயக்கம். அதனால்தான் ஆறாவது முறையாக ஆட்சியைக் கொடுத்து அலங்கரித்துள்ளார்கள் தமிழ்நாட்டு மக்கள். அதனால்தான், அனைத்து இந்துக்களும் அர்ச்சகர் ஆக முடியும் என்பதை நிறைவேற்றிக் காட்டி இருக்கிறோம்.

இந்தியாவிலேயே முதலில் பெண்களுக்கு சொத்தில் சமஉரிமை கொடுத்து, சனாதனம் மறுத்ததை சாத்தியம் ஆக்கியது திராவிட முன்னேற்றக் கழகம். எந்தத் தனிமனிதர் உணர்வுக்கும் மதிப்பளித்து அவர்களை சுயமரியாதை உள்ள மனிதர்களாக ஆக்கி வரும் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். இனம், மொழி, சாதி வேறுபாடு இன்றி அனைவரும் ஒரு தாய் மக்களாக வாழும் அமைதிமிகு வாழ்க்கையை உறுதிசெய்து வரும் இயக்கம். கொள்கையை அறிவுப்பிரச்சாரம் செய்தவர்களே தவிர, எந்தக் காலத்திலும் வன்முறையில் நம்பிக்கை இல்லாத இயக்கம். அத்தகைய பழம்பெரும் பேரியக்கத்தின் மீது களங்கம் கற்பிப்பதன் மூலமாக அரசியல் செய்ய நினைத்தால் அந்தப் புதைகுழியில், பா.ஜ.க.தான் மூழ்கும்! இவ்வாறு அந்த அறிக்கையில் மு.க. ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

# மாரண்டஅள்ளி ராதாகிருஷ்ணன் கோவிலில் உறியடி திருவிழா



மாரண்டஅள்ளி, செப். 8

தருமபுரி மாவட்டம் மாரண்டஅள்ளி ராதா கிருஷ்ணன் கோவிலில் கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு உறியடி திரு விழா நடைபெற்றது. இந் நிகழ்ச்சி நேற்று முன்தினம் 5ம் தேதி செவ்வாய்க்கிழமை காலை கோ பூஜை, கணபதி பூஜை செய்து கொடியேற்றத்துடன் தொடங்கியது. நேற்று 6ம் தேதி காலை கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு சாமிக்கு அபிஷே கம் மற்றும் அலங்கார ஆராதனை நடைபெற்றது. இதைத் தொடர்ந்து பக்தர்கள் தட்டு வரிசை ஊர்வலம் மற்றும் கருட சேவை, ஊஞ்சல் உற்சவ நிகழ்ச்சி நடைபெற்றது. பிறகு மாலை உறியடி திரு விழா நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் இளைஞர்கள் உரியடி திருவிழாவில் கலந்து கொண்டு உறிய டித்தனர். இதில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. பின்னர் ராதாகிருஷ்ணன் முக்கிய வீதிகள் வழியாக ரத உற்சவ வீதி உலா நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர்.

# ஊட்டியில் கடைகளை சேதப்படுத்தி பொருட்களை சூறையாடிய யானைகள்



ஊட்டி, செப். 8

நீலகிரி மாவட்டம் ஊட்டி அருகே உள்ள கொலக்கம்பை கிராமத்தில் தனியார் தேயிலை எஸ்டேட் உள்ளது. இங்கு நேற்று அதிகாலை 5 காட்டு யானைகள் புகுந்தன. அப்போது அவை அங்கு உள்ள ரேஷன் கடை, அங்கான்வாடி மையம், மளிகைக்கடை ஆகியவற்றை தாக்கி சேதப்படுத்தின. இதுகுறித்து வனத்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தகவலின்பேரில் வனத்துறை ஊழியர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். அதற்குள் காட்டு யானைகள் மீண்டும் வனப்பகுதிக்கு திரும்பி சென்று விட்டன. கொலக்கம்பை, கிளிஞ்சடா உள்ளிட்ட பகுதிகளில் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக குட்டியுடன் 5 காட்டு யானைகள் சுற்றி வருகின்றன. எனவே அவற்றை ஊருக்குள் புகாமல் தடுத்து நிறுத்த வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர். அப்போது காட்டு யானைகளின் நடமாட்டத்தை தீவிரமாக கண்காணித்து வருவதாகவும், கெத்தை வனப்பகுதிக்குள் யானைகள் விரைவில்திருப்பிஅனுபப்படும் எனவும் வனத்துறையினர் உறுதியளித்தனர்.

# கிருஷ்ண ஜெயந்தி விழா



கிருஷ்ணகிரி, செப். 8

கிருஷ்ண பகவான் அவதரித்த நாள் கிருஷ்ணஜெயந்தி விழாவாக கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு கிருஷ்ண ஜெயந்தி விழா நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி கிருஷ்ணகிரி பழைய பேட்டை கிருஷ்ணர் கோவில், லட்சுமி நாராயண சாமி கோவில், தர்மராஜா கோவிலில், கிருஷ்ணருக்கு அபிஷேகம் மற்றும் அலங்காரம் நடந்தது. தொடர்ந்து உற்சவர், பழையபேட்டை, நரசிம்ம சாமி கோவில் தெரு, நேதாஜி சாலை, மகாராஜகடை சாலை வழியாக தேரில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தனர். இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். கிருஷ்ணகிரி புதுப்பேட்டை வேணு கோபால் சாமி கோவிலில் கிருஷ்ண ஜெயந்தி விழா கொண்டாடப்பட்டது. விழாவை முன்னிட்டு 50க்கும் மேற்பட்ட குழந்தைகள் கிருஷ்ணர், ராதைவேடம் அணிந்து வந்தனர். தொடர்ந்து பஜனையை தொடர்ந்து கிருஷ்ணர், ராதை வேடம் அணிந்த குழந்தைகள்பூந்தோட்டம் முத்து மாரியம்மன் கோவில் வரை ஊர்வலமாக சென்ற னர். இதே போல வீடுகளிலும் கிருஷ்ணஜெயந்தி விழா நேற்று கொண்டாடப்பட்டது. வீடுகளில் கிருஷ்ணருக்கு சீடை, முறுக்கு படைத்து வழிபட்டனர். மேலும் குழந் தைகளுக்கு கிருஷ்ணர், ராதை வேடமிட்டு பெற் றோர் மகிழ்ந்தனர்.

# ரூ.14.8 கோடியில் புனரமைப்பு பணிகள் மும்முரம்: புதுப்பொலிவு பெறும் மேட்டுப்பாளையம் ரெயில் நிலையம்

கோவை, செப். 8

மேட்டுப்பாளையம் ரெயில்நிலையம் கடந்த 1873வது ஆண்டு தொடங்கப்பட்டது. மீட்ட ர்கேஜ் அகல ரெயில் பாதைகளை உடைய மிகச்சில ரெயில் நிலையங்களில் மேட்டுப்பாளையமும் ஒன்று. மேட்டுப்பாளையம் சென்னை இடையேயான நீலகிரி எக்ஸ்பிரஸ் ரெயில், இந்த பாதை வழியாகவே கோவை வந்துசெல்கிகிறது. மேட்டுப்பாளையம் ரெயில் நிலையத்தை தினமும் சராசரியாக 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகள் பயன்படுத்தி வருகின்றனர். அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் மேட்டுப்பாளையம் ரெயில் நிலையத்தை ரூ.14.8 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டுமான பணிகள் தொடங்க உள்ளது. அங்கு பயணிகள் கூட்ட நெரிசலைக் குறைக்கும் வகையில் வாகனப்போக்கு வரத்திற்காக அகலமான பாதைகள் உருவாக்கப்பட உள்ளன. மேலும் தனி நடைபாதைகள், வாகனங்களுக்கான தனி நுழைவு, மற்றும் தனியாக வெளியேறும் வசதிகள், 2 சக்கர4 சக்கர வாகனங்களுக்கு பிரத்யேக வாகன நிறுத்தம் ஆகியவை அமைக்கவும் திட்டமிடப்பட்டு உள்ளன. மேட்டுப்பாளையம் ரெயில்நிலைய வளாகமும் அழகுபடுத்தப்பட உள்ளது. மேலும் பிரதான நுழைவாயில், முன்ப திவு அலுவலகங்கள், காத்திருப்பு கூடம் மற்றும் கழிப்பறைகளின் உட்புறங்களும் மேம்படுத்தப்படுகிறது. ரெயில்கள் நிற்கும் இடத்தில் அறிவிப்பு பலகைகள் வைக்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது. இந்த பலகைகள் பயணிகளுக்கு பெரிதும் உதவியாக இருக்கும். தொடர்ந்து நடைமேடை மேற்பரப்பு மேம்படுத்தப்படுகிறது. அங்கு கூடுதலாக நடை மேடை நிழற்கூரைகள் அமைய உள்ளன. மேலும் பழைய தங்குமிடங்கள் சீரமைக்கப்பட உள்ளது. மாற்றுத்திறனாளி பயணிகளுக்கு ஏற்றபடி, மேட்டுப்பாளையம் ரெயில் நிலையத்தை மேம்படுத்துவது எனதிட்டமிடப்பட்டு உள்ளது. லிப்ட், எஸ்கலேட்டர் வசதி செய்து தரவும் அதிகாரிகள் திட்டமிட்டு உள்ளனர். ரெயில் நிலையத்திற்கு வருபவர்களின் பாது காப்புக்காக கண்காணிப்பு காமிராக்கள் பொருத்தப்படுகின்றன. இதுதவிர தூய்மையான குடிநீர் வசதி, மின்சார சிக்கனத்திற்காக ரெயில் நிலையத்தில் எல்.இ.டி விளக்குகள் பொருத்தப்பட உள்ளன. இத்தகைய சிறப்பம்சங்களுடன்மேட்டுப்பாளையம் ரெயில் நிலையம் புதுப்பொலிவு பெற உள்ளது. இதற்காக அங்கு மாதிரி புகைப்படம் ஒன்றையும் தென்னக ரெயில்வே தற்போது வெளியிட்டு உள்ளது.

# மாற்றுத்திறனாளிகளுக்கு ஒருங்கிணைந்த மருத்துவ முகாம்

பெரம்பலூர், செப். 8

பெரம்பலூர் மாவட்ட மாற்றுத்திறனாளிகள்நலத்துறை மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித்துறை ஆகியவற்றின் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான ஒருங்கிணைந்த மருத்துவ முகாம் பாடாலூர் அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் நடந்தது. முகாமிற்கு மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மணிவண்ணன் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். முகாமில் அரசு மருத்துவமனை மருத்துவர்களான எலும்பு முறிவு சிகிச்சை மருத்துவர், மனநல மருத்துவர், குழந்தைகள் நல மருத்துவர், கண் மருத்துவர், காது, மூக்கு, தொண்டை மருத்துவர் ஆகியோர் மாற்றுத்திறனாளிகளை பரிசோதித்து அறுவை சிகிச்சை தேவைப்படுவோர்கள், அடையாள அட்டை மற்றும் உதவி உபகரணங்களுக்காக பரிந்துரை செய்தனர். இதில் 25 மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்டன. 4 மாற்றுத்திறனாளிகளுக்கு மறு மதிப்பீடு செய்யப்பட்டது. சி.பி. நாற்காலி ஒரு நபருக்கும், சக்கர நாற்காலி 3 நபர்களுக்கும், நடைபயிற்சி வண்டி ஒரு நபருக்கும் வழங்க தேர்வு செய்யப்பட்டனர்.

# தி.மு.க.வுக்கு தேர்தலில் பொதுமக்கள் பதிலளிப்பார்கள்




ராஜபாளையம், செப். 8

என் மண்,என் மக்கள் என்ற பெயரில் பாரதிய ஜனதா கட்சியின் மாநில தலைவர் அண்ணாமலை நேற்று ராஜபாளையத்தில் நடை பயணத்தை தொடங்கி னார். அவர் வீதி, வீதியாக சென்று பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார். அப்போது அண்ணாமலை பேசியதாவது: 4 நாட்களுக்கு முன்பு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சனாதான தர்மத்தை வேர் அறுப்போம் எனக் கூறுகிறார். சனாதான தர்மம் என்று சொல்லி விட்டால் அவை கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிரி கிடையாது.அரவணைத்து செல்லக்கூடியதுசனாதான தர்மம்.ஆன்மீகஆட்சியில் தான் அனைவரும் நன்றாக இருப்பார்கள். தி.மு.க. கடந்த சில நாட்களாக மோடி ஆட்சியை ஊழல் ஆட்சி என கூறி வருகிறது. இதற்கு 2024ம் ஆண்டு தேர்தலின் போது பொதுமக்கள் பதிலளிப்பார்கள். தமிழக அரசுக்கு மத்திய அரசு 10 லட்சத்து 76 ஆயிரம் கோடி ரூபாய் வழங்கியுள்ளது. இது குறித்து 15 பக்க வெள்ளை அறிக்கையை வெளியிட்டுள்ளோம். சந்திராயன்3 அனுப்பப் பட்ட நிலாவில் கூட இவ்வளவு குண்டும் குழியும் இல்லை. ஆனால் ராஜபாளையம் தென்காசி தேசிய நெடுஞ்சாலை குண்டும் குழியுமாக படு மோசமாக உள்ளது. ராஜபாளையத்தில் சந்திராயன் விண்கலத்தை இறக்கினால் கவிழ்ந்து விழும் நிலைக்கு சாலை மோசமாக உள்ளது எனவும் மற்ற நகராட்சிகளை விட ராஜபாளையத்தில் சொத்து வரி மிக மிக அதிகமாக உள்ளது. பொதுமக்களாகிய நீங்கள் அதனை தட்டிக் கேட்க வேண்டும்.தாமிர பரணி கூட்டு குடிநீர் திட்ட இணைப்பு பணி தாமதமாக நடைபெற்று வருகிறது. இவ்வாறு அவர் பேசினார்.

# செல்போன் டவர் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து போராட்டம்



ஆலங்காயம், செப். 8

வாணியம்பாடி டவுன் பகுதியில் உள்ள முஸ்லீம் பூர் கே.கே தெருவில் உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடத்தில் புதியதாக செல்போன் டவர் அமைக்கும் பணி நடைப்பெற்றது. இதனை அறிந்த அந்த பகுதி பொது மக்கள் செல்போன் டவர் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று வாணியம்பாடி டவுன் போலீசார் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி, செல்போன் டவர் அமைக்கும் பணியை தடுத்து நிறுத்திய பின்னர் பொது மக்கள் கலைந்து சென்றனர்.

# ஆசனூர் மலைப்பகுதியில் சி.சி.டி.வி. கேமராக்கள் பொருத்தம்

சத்தியமங்கலம், செப். 8

ஈரோடு மாவட்டத்தில் குற்றங்களை தடுக்க மாவட்ட காவல்துறை சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுவருகிறது.அதன்படி சத்தியமங்கலம்சப்டிவிஷனில் உள்ள ஆசனூர் காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதிகளில் குற்றங்களை தடுப்பதற்காக முக்கிய இடங்களில் சி.சி.டி.வி. கேமராக்கள் பொருத்தப்பட்டு அதற்கான கட்டு ப்பாட்டு அறை ஆசனூர் காவல் நிலை யத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஆசனூர் காபி டே பேக்கரி முன்பு 4 கேமராக்களும், காவல் நிலையம் முன்பு 2 கேம ராக்களும், அரேப்பாளையம் மைராடா வேளாண் அறிவியல் நிலை யம் முன்பு 2 கேமராக்களும், திம்பம் பஸ் நிலையம் பகுதி யில் 4 கேமராக்கள் என மொத்தம் 16 கேமராக்கள் பொருத்தப்பட்டு ள்ளது. இந்த கேமராக்கள் இணையதள இணைப்புகள் மூலம் ஆசனூர் காவல் நிலைய கட்டுப்பாட்டு அறை யுடன் இணைக்கப்பட்டு ள்ளன. இதையடுத்து ஆச னூர் காவல் நிலையத்தில்நடைபெற்ற நிகழ்ச்சி யில் சத்தியமங்கலம் ஏ.எஸ்.பி. அய்மன் ஜமால் சி.சி.டி.வி. கேமரா இயக்கத்தை தொடங்கி வைத்தார். தொடர்ந்து 24 மணி நேரமும் சி.சி.டி.வி. கேமரா க்கள் மூலம் கண்காணி க்கப்பட்டு குற்றங்கள் உட னடியாக தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவி த்தார். அப்போது தாளவாடி இன்ஸ்பெக்டர் செல்வம் சிறப்பு இன்ஸ்பெக்டர் தேவேந்திரன் ஆகியோர் உடன் இருந்தனர்.

# செஞ்சியில் வெறிநாய் கடித்ததில் 15 பேர் காயம்: அரசு மருத்துவமனையில் அனுமதி

விழுப்புரம், செப். 8

விழுப்புரம் மாவட்டம் செஞ்சிகாந்திபஜார்,சந்தை மேடு, களவாய் கூட்டு ரோடு ஆகிய பகுதிகளில் வெறிபிடித்த தெரு நாய் ஒன்று சாலையில் சென்று கொண்டிருந்த பள்ளி மாணவர்கள்,முதியோர் உள்ளிட்ட பொதுமக்களை கடித்ததில் ஆதிலட்சுமி (50) சக்திவேல் (35), சாதனா( 14), மகாதேவன் (65), ஆகாஷ் (22) நவீன்குமார் (21) உட்பட 15க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். அவ ர்கள் செஞ்சி அரசு மருத்து வமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்க ப்பட்டுள்ளனர். ஒரே நாய் கடித்ததில் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு அரசு மருத்து வமனையில் சிகிச்சை பெற்று வரும் சம்பவம் செஞ்சி பகுதியில் பெரும் பரப்பரப்பை ஏற்படுத்தி யுள்ளது.

# இரவிபுத்தன்துறையில் ஏ.வி.எம். கால்வாயின் குறுக்கே ரூ.48½ லட்சத்தில் புதிய பாலம்



மார்த்தாண்டம்,செப்.8

விஜய்வசந்த் எம்.பி., ராஜேஷ்குமார் எம்.எல்.ஏ. திறந்து வைத்தனர் காங்கிரஸ் கட்சியின் செயல்வீரர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

கன்னியாகுமரி பாராளுமன்ற தொகுதி மற்றும் கிள்ளியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தூத்தூர் ஊராட்சியில் உள்ள இரவிபுத்தன்துறை கிராம மக்கள் தங்களது பகுதியிலிருந்து பல்வேறு இடங்களுக்கு செல்ல பாலம் இல்லாமல் அவதிப்பட்டு வந்தனர். இதனால் இந்த கிராம மக்கள் விஜய் வசந்த் எம்.பி. மற்றும் ராஜேஷ் குமார் எம்.எல்.ஏ. ஆகியோரிடம் இந்த பகுதியில் ஏ.வி.எம். சானலின் குறுக்கே புதிய பாலம் அமைத்து தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். இதனை ஏற்று ஏ.வி.எம். கால்வாயின் குறுக்கே பாலம்கட்டவிஜய்வசந்த் எம்.பி. தனது பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.10 லட்சமும், ராஜேஷ்குமார் எம்.எல்.ஏ. தனது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து ரூ.7.50 லட்சமும் ஒதுக்கீடு செய்தனர். மேலும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டங்களின் கீழ் ரூ.31 லட்சத்து 9 ஆயிரத்து 500 என மொத்தம் ரூ.48½ லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து புதிய பாலம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வந்தது. தற்போது இந்த பணிகள் முடிவடைந்ததையடுத்து விஜய்வசந்த் எம்.பி., ராஜேஷ் குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் இணைந்து புதிய பாலத்தை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர். இந்த நிகழ்ச்சியில் முஞ்சிறை மேற்கு வட்டார காங்கிரஸ் கமிட்டி தலைவர் விஜயகுமார், இரவிபுத்தன்துறை பங்கு தந்தை ரதீஷ், மாவட்ட நிர்வாகிகள் அந்தோணி பிச்சை, ராஜூ மற்றும் மகேஷ், காங்கிரஸ் கட்சியின் செயல்வீரர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# பூண்டி அருகே சிறுத்தைப்புலி நடமாட்டமா?: காட்டுப்பகுதியில் கேமரா பொருத்தி கண்காணிப்பு

திருவள்ளூர், செப். 8

பூண்டி பகுதியில் உள்ள காப்புக்காடு அருகே மோவூர் கிராமம் உள்ளது. நேற்று முன்தினம் இரவு அப்பகுதியை சேர்ந்த ரஜினி என்பவரின் 8 ஆடுகளை மர்ம விலங்கு கடித்தில் இறந்து போனது. அனைத்து ஆடுகளின் கழுத்திலும் விலங்கின்பல்தடம் பதிந்து இருந்தால் தாக்கியது சிறுத்தைப்புலியாக இருக்கலாம் என்ற தகவல் பரவியது. இதனால் மோவூர் கிராம மக்கள் அச்சம் அடைந்தனர். கிராமத்திற்கும் அருகில் உள்ள காட்டுப்பகுதிக்கும் குறைந்த தூரமே உள்ளதால் சிறுத்தைப்புலி வந்திருக்கலாம் என்று அப்பகுதி மக்கள் அச்சம் அடைந்து உள்ளனர். ஆனால் இதுவரை சிறுத்தை நடமாட்டம் அப்பகுதியில் இல்லை. எனினும் வன அலுவலர் விஜய சாரதி தலைமையிலான வனத்துறை அதிகாரிகள் மோவூர் கிராமத்திற்கு சென்று இறந்து போன ஆடுகளை ஆய்வு செய்தனர். கிராம பகுதியில் சிறுத்தைப்புலியின் கால்தடம் எதுவும் பதிவாகி உள்ளதா? என்று பார்வையிட்டனர்.

இதைத்தொடர்ந்து ஆடுகளை கொன்ற மர்மவிலங்கு குறித்து அறிய அப்பகுதியை சுற்றிலும் 5 கண்காணிப்பு கேமராக்களை பொருத்தி உள்ளனர். அதில் சிறுத்தைப்புலி அல்லது வேறு ஏதேனும் உருவம் பதிவாகி உள்ளதா என்று ஆய்வு செய்து வருகிறார்கள்.

பூண்டி காப்புக்காடு பகுதியிலும் ரோந்து சென்று மர்ம விலங்கு நடமாட்டம் குறித்து பார்வையிட்டனர். ஒரே நாளில் 8 ஆடுகளை மர்மவிலங்கு கடித்து கொன்றதால் மோவூர் கிராம மக்கள் சிறுத்தைப்புலி பீதியில் உள்ளனர்.

# திரவுபதியம்மன் கோவில் தேர்திருவிழா

அரூர், செப். 8

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், வேப்பம்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள திரவுபதியம்மன் கோவிலில் 6ஆம் ஆண்டு திருத்தேர் விழா நடைபெற்றது. இவ்விழாவானது கடந்த மாதம் தொடங்கி வருகிற 8ம் தேதி வரை நடைபெறுகிறது . தேர் திருவிழாவை முன்னிட்டு மாப்பிள்ளை மற்றும் பெண் வீட்டார்கள் ஒன்று கூடி திருக்கல்யாண நிகழ்ச்சி நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து அம்மனுக்கு மாவிளக்கு எடுத்தல் ,கூழ் ஊற்றுதல், கரகாட்டம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றது. பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு பிறகு திரெளபதியம்மன் திரு தேரோட்டம் நடைபெற்றது. தேரோட்ட நிகழ்வில் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் அம்மனை வணங்கி வழிபட்டனர். தேர் திருவிழாவில் அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்படாமல் இருக்க போலீசார், தீயணைப்பு துறையினர் ,வருவாய் துறையினர், சுகாதாரத்துறையினர் மற்றும் மின்சார துறையினர் ஆகியோர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 08.09.2023

# சத்யராஜ் தாயார் மறைவு.. நேரில் சந்தித்து ஆறுதல் கூறிய முதலமைச்சர்

தமிழ் திரையுலகின் முன்னணி நடிகரான சத்யராஜின் தாயார் நாதாம்பாள் காளிங்கராயர் (94). இவர் கோவையில் வசித்து வந்தார். இவர் வயது மூப்பின் காரணமாக ஆகஸ்ட்




11ஆம் தேதியன்று மாலை 4 மணிக்கு கோவையில் காலமானார். நாதாம்பாளுக்கு சத்யராஜ் என்ற மகனும், கல்பனா மன்றாடியார், ரூபா சேனாதிபதி ஆகிய இரு மகள்களும் உள்ளனர். இவரது மறைவிற்கு திரையுலகினர், அரசியல் தலைவர்கள் என பலர் இரங்கல் தெரிவித்தனர். சத்யராஜ் நாதாம்பாள் இந்நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நடிகர் சத்யராஜை நேரில் சந்தித்து அவரது தாயார் நாதாம்பாள் மறைவிற்கு ஆறுதல் கூறினார்.

இது தொடர்பான புகைப்படம் சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது.

# இந்தியா என்ற பெயரே எனக்கு போதுமானதாக இருக்கிறது வெற்றிமாறன்

தனுஷ் நடிப்பில் 2007ம் ஆண்டு வெளியான பொல்லாதவன் படத்தின் மூலம் தமிழ் திரையுலகிற்கு இயக்குனராக அறிமுகமானவர் வெற்றிமாறன். அதன்பின்னர் ஆடுகளம், விசாரணை, வடசென்னை, அசூரன், விடுதலை உள்ளிட்ட படங்களை இயக்கி ரசிகர்களை கவர்ந்தார். இவர் தற்போது சூரியின் விடுதலை2 படத்திலும் சூர்யாவின் வாடிவாசல் பட பணிகளிலும் தீவிரம் காட்டி வருகிறார். இந்நிலையில், இந்தியா என்ற பெயரே போதுமானது என்று வெற்றிமாறன் கூறியுள்ளார். அவர் பேசியதாவது, "இந்தியா என்ற பெயரே எனக்கு போதுமானதாக இருக்கிறது. தேசிய விருதுகள் குறித்து எனக்கு வேறு விதமான கருத்து இருக்கிறது. நாம்



ஒரு படத்தை தேர்வுக்கு அனுப்பும் போது தேர்வுக்குழுவின் முடிவுக்கு கட்டுப்படுகிறேன் என்ற ஒப்புதலுடன் தான் அனுப்புகிறோம். அந்த தேர்வு குழு சிறந்த தேர்வு குழுவா? இல்லையா? சரியாக தேர்ந்தெடுக்கிறார்களா? என்பது அடுத்த கட்டம். நான் ஒரு படத்தை அனுப்புகிறேன் என்றால் இந்த தேர்வுக்குழுவின் தீர்ப்பு இறுதியானது என்று ஏற்றுக் கொண்டுதான் அனுப்புகிறோம். பிறகு அந்த படத்திற்கான விருது கிடைக்கிறது இல்லை என்பது அந்த தேர்வுக்குழுவின் முடிவு. ஒரு தேர்வுக்குழுவின் முடிவு நிச்சயமாக ஒரு படத்தின் தரத்தை, அந்த படத்தின் சமூக பங்களிப்பை தீர்மானிப்பது இல்லை. 'ஜெய்பீம்' படம் என்ன செய்ய வேண்டும் என்று அவர்கள் தொடங்கினார்களோ அதை அந்த படம் செய்துவிட்டது" என்று பேசினார்.



# தவழ்ந்து வரும் கிருஷ்ணர்கள்.. நயன்தாரா பகிர்ந்த புகைப்படம் வைரல்

தமிழ் திரையுலகின் முன்னணி நடிகையான நயன்தாரா, அட்லீ இயக்கத்தில் ஷாருக்கான் நடிப்பில் வெளியாகியுள்ள 'ஜவான்' திரைப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

இப்படம் வெற்றி பெறுவதற்காக நயன்தாரா, ஷாருக்கான் மற்றும் அவர்களது குடும்பத்தினர் திருப்பதிக்கு சென்று சாமி தரிசனம் செய்தனர். இவ்வளவு நாட்கள் சமூக வலைதளத்தில் நாட்டம் கொள்ளாத நயன்தாரா சமீபத்தில் இன்ஸ்டாகிராமில் தனது அதிகாரப்பூர்வகணக்கைதொடங்கினார். இதில்முதல்பதிவாகதனதுகுழந்தைகளுடன் இருக்கும் வீடியோவை பகிர்ந்திருந்தார்.

இந்த வீடியோவை ரசிகர்கள் சமூக வலைதளத்தில் வைரலாக்கினர். இதையடுத்து தன் குழந்தைகளுடன் கொண்டாடும் பண்டிகைகளின் புகைப்படங்களை தொடர்ந்து பதிவிட்டு வருகிறார். இந்நிலையில், தற்போது கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு தனது மகன்கள் உயிர் மற்றும் உலகிற்கு பட்டு வேட்டி அணிவித்து குட்டி கிருஷ்ணர்களாக அலங்கரித்து அவர்கள் பூஜை அறைக்கு தவழ்ந்து செல்லும் புகைப்படங்களை இணையத்தில் பதிவிட்டு அனைவருக்கும் கிருஷ்ண ஜெயந்தி வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்த பதிவிற்கு ரசிகர்கள் லைக்குகளை குவித்து வருகின்றனர்.

# கங்கனாவை சந்தித்தால் கன்னத்தில் அறைவேன் பாகிஸ்தான் நடிகை ஆதங்கம்



பாலிவுட் திரையுலகின் முன்னணி நடிகையான கங்கனா ரனாவத், ஜெயம் ரவி நடிப்பில் வெளியான தாம் தூம் படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானார். அதன் பின்னர் மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா வாழ்க்கை வரலாறாக உருவாகி வெளியான தலைவி படத்தில் நடித்து ரசிகர்களை கவர்ந்தார். கங்கனா தற்போது இவர் 'சந்திரமுகி 2' திரைப்படத்தில் நடித்துள்ளார். இப்படம் செப்டம்பர் 15ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. நடிகை கங்கனா ரனாவத் அவ்வப்போது சமூக வலைதளங்களில் சர்ச்சை கருத்தை சொல்லி பரபரப்பை ஏற்படுத்துவார். இந்நிலையில், கங்கனாவை நேரில் சந்தித்தால் கன்னத்தில் அறைவேன் என பாகிஸ்தான் நடிகை நவுஷீன் ஷா தெரிவித்துள்ளார். அதாவது, நடிகை கங்கனா ரனாவத்தை ஒருமுறையாவது சந்திக்க விரும்புகிறேன். அவ்வாறு நான் அவரை சந்திக்கும்பட்சத்தில் அவரை இரண்டு முறை கன்னத்தில் அறைவேன். நவுஷீன் ஷா அவர் எங்கள் நாட்டைப் பற்றியும் பாகிஸ்தான் ராணுவம் குறித்தும் சர்ச்சையான கருத்துகளை கூறுகிறார். மற்ற நாட்டைப் பற்றி எதற்காக அவர் பேச வேண்டும். உங்கள் நாட்டின் மீது கவனம் செலுத்துங்கள். உங்கள் திரைப்படங்களைப் பாருங்கள். உங்கள் மீதான சர்ச்சைகள், முன்னாள் காதலன் குறித்து பேசுங்கள்." என ஆதங்கமாக பேசியுள்ளார்.

# 7 முறை கருக்கலைப்பு செய்யப்பட்டதாக வாக்குமூலம்: விஜயலட்சுமிக்கு மருத்துவ பரிசோதனை

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மீது நடிகை விஜயலட்சுமி 12 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் அளித்துள்ள பாலியல் புகார் தொடர்பாக மகளிர் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள். கோயம்பேடு துணை கமிஷனர் உமையாள் மேற்பார்வையில் விஜயலட்சுமி அளித்துள்ள புகார் மீது அடுத்தடுத்து போலீசார் சட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். சீமான் மீது புகார் அளித்த விஜயலட்சுமி அளித்த பேட்டியில் 7 முறை கருக்கலைப்பு செய்யப்பட்டதாக குற்றம் சாட்டி இருந்தார். இது தொடர்பாக போலீஸ் விசாரணையிலும் அவர் பரபரப்பு வாக்குமூலம் அளித்துள்ளார். திருவள்ளூர் மாஜிஸ்திரேட் முன்னிலையிலும் நடந்தது என்ன? என்பது பற்றி விஜயலட்சுமி கடந்த வாரம் வாக்குமூலம் அளித்திருந்தார்.



இதன் அடிப்படையில் சீமானுக்கு எதிரான புகார் மீது போலீசார் அடுத்த கட்ட நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். இதை தொடர்ந்து விஜய லட்சுமிக்கு மருத்துவ பரிசோதனை நடத்த போலீசார் முடிவு செய்திருந்தனர். இதன்படி கீழ்ப்பாக்கம் அரசு ஆஸ்பத்திரிக்குஇன்றுகாலையில்விஜயலட்சுமி அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு அவருக்கு டாக்டர்கள் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டனர். இந்த பரிசோதனை தொடர்பான தகவல்கள் மற்றும் மருத்துவ அறிக்கையின் அடிப்படையில் சீமான் மீதான புகாரில் மேல் நடவடிக்கைக்கு போலீசார் தயாராகி வருகிறார்கள். கடந்த சில நாட்களுக்கு முன்பு கோவையில் இருந்த போது 5 தனிப்படையினர் அங்கு விரைந்திருந்தனர். இதனால் சீமான் மீது கைது நடவடிக்கை பாய இருப்பதாக பரபரப்பான தகவல்கள் வெளியானது. இதுதொடர்பாக போலீசாரிடம் கேட்டபோது சம்மன் கொடுப்பதற்காகவே கோவை சென்றுள்ளோம் என்று தெரிவித்தனர். ஆனால் சீமான் தரப்பில் சென்னைக்கு வந்த பின் சம்மனை வாங்கிக் கொள்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இந்த நிலையில்தான் சீமான் மீதான புகாரில் விஜயலட்சுமிக்கு போலீசார் திடீரென மருத்துவ பரிசோதனை மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இதனால் விஜயலட்சுமி புகாரில் போலீசார் அடுத்து மேற்கொள்ள உள்ள நடவடிக்கை என்ன? என்பது எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.



# 'காவாலா' பாடல் வீடியோ வெளியானது

இயக்குனர் நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் ரஜினி நடிப்பில் ஆகஸ்ட் 10ஆம் தேதி வெளியான திரைப்படம் 'ஜெயிலர்'. இந்த படத்தில் மலையாள நடிகர் மோகன்லால், கன்னட நடிகர் சிவராஜ்குமார், ரம்யா கிருஷ்ணன், யோகிபாபு, வசந்த் ரவி, விநாயகன் உள்ளிட்ட திரைப்பிரபலங்கள் பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளதால் ரசிகர்கள் இப்படத்தை திரையரங்குகளில் கொண்டாடினர். இப்படத்திற்கு அரசியல் தலைவர்கள், திரைப்பிரபலங்கள் என பலர் வாழ்த்து தெரிவித்தனர்.


மேலும், இப்படம் ரூ.525 கோடிக்கு மேல் வசூல் குவித்தது. 'ஜெயிலர்' படத்தின் வெற்றியைத் தொடர்ந்து தயாரிப்பாளர் கலாநிதி மாறன் ரஜினி, நெல்சன் மற்றும் அனிருத்திற்கு கார் மற்றும் காசோலைகளை பரிசாக வழங்கினார். இந்நிலையில், 'ஜெயிலர்' படத்தில் இடம்பெற்றிருந்த மிகப்பெரிய ஹிட் அடித்த 'காவாலா' பாடலின் வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது. இந்த வீடியோ வெளியான ஒரே நாளில் மூன்று மில்லியன் பார்வையாளர்களை கடந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# உலகக் கோப்பை போட்டிக்கு பிறகு பயிற்சியாளர் பதவியில் ராகுல் டிராவிட் நீடிப்பாரா?

13வது உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி அக்டோபர் 5ந்தேதி முதல் நவம்பர் 19ந்தேதி வரை இந்தியாவில் உள்ள 10 நகரங்களில் நடக்கிறது. இந்தியாவில் போட்டி நடைபெறுவதால் ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி 3வது முறையாக ஐ.சி.சி. உலக கோப்பையை வெல்லுமா? என்ற எதிர்பார்ப்பு அதிகமாக இருக்கிறது. கபில்தேவ் தலைமையில் 1983ம் ஆண்டு முதல் முறையாக உலகக் கோப்பை கிடைத்தது. 28 ஆண்டுகளுக்கு பிறகு டோனி தலைமையில் 2011ம் ஆண்டில் 2வது தடவையாக உலக கோப்பையை பெற்றோம். இந்திய அணி ஐ.சி.சி. கோப்பையை வென்று 10 ஆண்டுகள் ஆகிறது. கடைசியாக 2013ல் ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபியை வென்றது. ஐ.சி.சி. போட்டிகளில் இந்தியா



திணறி வருகிறது. இதனால் இந்த உலகக் கோப்பயை வெல்ல வேண்டிய நெருக்கடியில் உள்ளது. இந்திய அணிக்கு தலைமை பயிற்சியாளராக ராகுல் டிராவிட் இருக்கிறார். 'சுவர்' என்று அழைக்கப்படும் முன்னாள் கேப்டனான அவரது பயிற்சியாளர் பதவிக்காலம் உலகக்கோப்பை போட்டியோடு முடிவடைகிறது. உலகக் கோப்பை போட்டிக்கு பிறகு அவர் பயிற்சியாளர் பதவியில் நீடிப்பாரா? என்று எதிர்பார்க்கப்படுகிறது. உலகக் கோப்பையை வென்றால் மட்டுமே ராகுல் டிராவிட் பயிற்சியாளராக நீடிக்கலாம் என்று கருதப்படுகிறது. உலகக் கோப்பையை இந்திய கைப்பற்றாவிட்டால் அவரத ஒப்பந்தம் நீட்டிக்கப்படமாட்டாது என்று கூறப்படுகிறது. அதேநேரத்தில் தென் ஆப்பிரிக்கா, இங்கிலாந்து தொடர் வரை டிராவிட் பயிற்சியாளராக நீடிக்கப்படலாம் என்றும் கிரிக்கெட் வாரிய வட்டாரங்கள் தெரிவித்தன.




# மகளிர் கிரிக்கெட்: இங்கிலாந்துக்கு எதிராக முதல் முறையாக தொடரை வென்று வரலாறு படைத்த இலங்கை

இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயனம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. அங்கு 3 போட்டிகள் கொண்ட டி20 மற்றும் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. அதன்படி இவ்விரு அணிகளுக்கு இடையே முதலில் டி20 தொடர் நடைபெற்றது. இதில் நடந்த முதல் 2 போட்டிகளில் இங்கிலாந்து மற்றும் இலங்கை அணிகள் வெற்றி பெற்று தொடரில் 11 என்ற கணக்கில் சமநிலையில் இருந்தன. இந்நிலையில் இவ்விரு அணிகளுக்கு இடையேயான 3வது மற்றும் கடைசி டி20 போட்டி நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற இலங்கை அணி கேப்டன் சமாரி அத்தபத்து முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி முதலில் பேட்டிங் செய்த இங்கிலாந்து வீராங்கனைகள் இலங்கை அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் அடுத்தடுத்து ஆட்டம் இழந்தனர். இதனால் இங்கிலாந்து அணி 19 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 116 ரன்கள் மட்டும் எடுத்தது. இலங்கை அணி தரப்பில் கேப்டன் சமாரி அத்தபத்து 3 விக்கெட்டுகள் வீழ்த்தி அசத்தினார். பின்னர் 117 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய இலங்கை அணியினர் 17 ஓவர்களில் 3 விக்கெட்டுகள் இழப்பிற்கு 117 ரன்கள் அடித்து 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் இலங்கை அணி 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரை 21 என்ற கணக்கில் கைப்பற்றி அசத்தியது. மகளிர் கிரிக்கெட் வரலாற்றில் இங்கிலாந்து அணிக்கு எதிராக இலங்கை அணி தொடரை வெல்வது இதுவே முதல் முறையாகும். இந்த தொடர் முழுவதும் சிறப்பாக செயல்பட்ட இலங்கை அணி கேப்டன் அத்தபத்து இந்த போட்டியில் ஆட்டநாயகி விருது மற்றும் தொடர்நாயகி விருதை வென்று அசத்தியுள்ளார். அடுத்ததாக இவ்விரு அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெற உள்ளது.

# கே.எல்.ராகுல் அதுக்கு சரிப்பட்டு வரமாட்டார்.. இஷான் கிஷன் தான் சரியான ஆளு.. கவாஸ்கர்



உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான 15 பேர் கொண்ட இந்திய அணியில் ஸ்ரேயாஸ் அய்யர், லோகேஷ் ராகுல், இஷான் கிஷன் மிடில் ஆர்டர் பேட்ஸ்மேன்களாக இடம் பெற்றுள்ளனர். இஷான்கிஷன் 5வது வரிசையில் இடம்பெற்றால் 4வது வீரராக விளையாடுவதற்கு ஸ்ரேயாஸ் அய்யர், கே.எல். ராகுல் இடையே போட்டி நிலவும் என்று முன்னாள் கேப்டனும், டெலிவிசன் வர்ணனையாளருமான கவாஸ்கர் தெரிவித்து உள்ளார். இதுதொடர்பாக அவர் கூறியதாவது: 4வது வரிசையில் ஆடுவதற்கு ஸ்ரேயாஸ் அய்யர், ராகுல் இடையே போட்டி இருக்கும். இஷான்கிஷன் பேட்ஸ்மேனாக களம் இறங்கினால் ராகுல் விக்கெட் கீப்பிங் செய்வார். ராகுலுக்கு சில கடுமையான காயங்கள் ஏற்பட்டதால் இஷான் கிஷன் விக்கெட் கீப்பராக பணியாற்றுவது நல்லது. இவ்வாறு கவாஸ்கர் கூறியுள்ளார்.

# பலோன் டி'ஓர் விருது:ரொனால்டோ ரசிகர்கள் அதிர்ச்சி

வருடம் வருடம் சிறந்த கால்பந்து வீரர்களுக்கான பலோன் டி ஓர் விருதை பிபா வழங்கி வருகிறது. 1956 முதல் இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருதை வாங்குவதில் 2007ம் ஆண்டு முதல் மெஸ்சி மற்றும் ரொனால்டோவுக்கு இடையே கடும் போட்டி நிலவி வந்தது. இந்நிலையில் இந்த ஆண்டுக்கான விருதுக்கான பரிந்துரைக்கப்பட்டவர்களில் 60 (30 ஆண் மற்றும் பெண்) பேர் இடம் பெற்றுள்ளனர். கடந்த ஆண்டு டிசம்பரில் கத்தாரில் நடந்த உலகக் கோப்பையை அர்ஜென்டினா வெல்ல உதவுவதில் முக்கிய பங்கு வகித்த லியோனல் மெஸ்ஸி இந்த பட்டியலில் இடம் பிடித்துள்ளார். மேலும் எம்பாப்பே மற்றும் எர்லிங் ஹாலண்ட் ஆகியோரும் இந்த பரிந்துரைக்கப்பட்டவர்களில் ஒருவராக உள்ளனர். இதில் போர்ச்சுகல் ஜாம்பவான் மற்றும் எல்லா காலத்திலும் சிறந்த கால்பந்து வீரர்களில் ஒருவரானகிறிஸ்டியானோரொனால்டோ பெயர் பரிந்துரை பட்டியலில் இடம் பெறவில்லை. 5 முறை இந்த விருதை பெற்றுள்ள அவர் பெயர் இடம் பெறாதது அவரது ரசிகர்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. ரொனால்டோ முதல் முறையாக 2008ம் ஆண்டு இந்த விருதை பெற்றார். அதனை தொடர்ந்து 2013, 2014, 2016, 2017 என கைப்பற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஆசிய கிரிக்கெட் கவுன்சில் இழப்பீடு வழங்கவேண்டும் பாகிஸ்தான் வலியுறுத்தல்

ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி கடந்த 30ந் தேதி பாகிஸ்தானில் உள்ள முதல்தான் நகரில் தொடங்கியது. இந்திய போட்டியில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்காளதேசம், ஆப்கானிஸ்தான், நேபாளம் ஆகிய 6 நாடுகள் பங்கேற்றன. பாகிஸ்தானில் விளையாட மறுத்ததால் இந்தியா விளையாடும் போட்டிகள் இலங்கைக்கு மாற்றப்பட்டது. 6 லீக் ஆட்டத்தில் 3 ஆட்டங்கள் பாகிஸ்தானில் உள்ள லாகூர் நகரில் நடைபெற்றது. 3 போட்டிகள் இலங்கையில் நடந்தது. சூப்பர்4 சுற்றின் 6 போட்டிகளில் முதல் ஆட்டம் பாகிஸ்தானில் நேற்று நடந்தது. சூப்பர்4 சுற்றின் எஞ்சிய 5 ஆட்டங்களும், இறுதிப்போட்டியும் இலங்கையில் உள்ள கொழும்பில் நடக்கிறது. ஆசிய கோப்பை போட்டியின் மொத்தம் 13 போட்டிகளில் 4 ஆட்டங்கள் பாகிஸ்தானில் நடந்துவிட்டது. 9 போட்டிகள் இலங்கைக்கு மாற்றம் செய்யப்பட்டது. ஆசிய கோப்பை போட்டியை இலங்கையில் நடத்தியதால் தங்களுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் (பி.சி.பி.) தெரிவித்துள்ளது. இதற்கு இழப்பீடு கேட்டு ஆசிய கிரிக்கெட் கவுன்சிலிடம் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் முறையிட்டுள்ளது. இதுகுறித்து பி.சி.பி. அதிகாரப்பூர்வமாக கருத்து தெரிவிக்கவில்லை. அதே நேரத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரிய தலைவர் ஜகா அஸ்ரப் ஆசிய கிரிக்கெட் கவுன்சில் (ஏ.சி.சி) தலைவர் ஜெய்ஷாவுக்கு இழப்பீடு கோரிக்கையை கோடிட்டு முறைப்படி கடிதம் எழுதியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. ஏ.சி.சி.யின் மற்ற நிர்வாக குழு உறுப்பினர்களிடம் கலந்து ஆலோசிக்காமல் இடங்களை மாற்றுவதற்கான கடைசி நிமிட முடிவுகளை எடுத்ததற்கு யார் பொறுப்பு என்று அவர் தனது கடிததத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். போட்டிகள் மற்றும் போட்டிகள் நடைபெறும் இடங்கள் குறித்த முக்கிய முடிவுகளில் பாகிஸ்தான் புறக்கணிக்கப்பட்டதாகவும் அவர் அதிருப்தி அடைந்துள்ளார். பாகிஸ்தானின் இந்த கோரிக்கைக்கு ஆசிய கிரிக்கெட் கவுன்சில் எவ்வாறு பதில் அளிக்க போகிறது மற்றும் இழப்பீடு ஏதேனும் வழங்கப்படுமா? என்பதை பொறுத்து இருந்து பார்க்க வேண்டும்.




Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.